# இரண்டாம் பருவ பொது தொகுத்தறித் தேர்வு – 2024

*

## ஏழாம் வகுப்பு

நேரம்: 2.00 மணி **சமூக அறிவியல்** மதிப்பெண்கள்:60

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5x1=5

1. விஜயநகர கட்டட தூண்களில் பெரும்பாலும் காணப்படும் விலங்கு எது?
அ) யானை ஆ) குதிரை இ) பசு ஈ) மான்
2. சிவாஜியின் ஆசிரியராகவும் மற்றும் பாதுகாவலராகவும் இருந்தவர் யார்?
அ) தாதாஜி கொண்ட தேவ் ஆ) கவிகலாஷ்
இ) ஜீஜாபாய் ஈ) ராம்தாஸ்
3. எந்த மாவட்டத்தில் குற்றாலம் நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது?
அ) தருமபுரி ஆ) திருநெல்வேலி இ) நாமக்கல் ஈ) தேனி
4. முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்களை நியமிப்பவர்
அ) குடியரசுத்தலைவர் ஆ) பிரதமர்
இ) ஆளுநர் ஈ) தேர்தல் ஆணையர்
5. கீழ்க்கண்டவற்றில் ஒலிபரப்பு ஊடகம் என்பது
அ) இதழ்கள் ஆ) அறிக்கைகள் இ) நாளிதழ்கள் ஈ) வானொலி

**II கோடிட்ட இடங்களை நிரப்புக:** 5x1=5

6. விஜயநகரப் பேரரசர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களுக்கு ________ என்று பெயர்.
7. அஷ்டபிரதானில் இடம் பெற்ற வெளியுறவுத் துறை அமைச்சர் ________
8. தமிழ்நாட்டில் இரும்பு தாதுக்கள் காணப்படும் இடம் ________
9. இரண்டாவது அழகிய – நீண்டக் கடற்கரை ________
10. அச்சு இயந்திரம் ________ என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

**III பொருத்துக** 5x1=5

| | | |
|---|---|---|
| 11. ராணி சந்த்பீபி | – | மாநிலத்தின் தலைவர் |
| 12. அப்சல்கான் | – | அகமது நகர் |
| 13. புதை படிம எரிபொருள் | – | பீஜப்பூர் தளபதி |
| 14. ஆளுநர் | – | உயர் விளிம்பு |
| 15. ஆனை மலை வாழிடம் | – | பெட்ரோலியம் |

**IV சரியா? தவறா?** 4x1=4

16. அஷ்டதிக்கஜத்தில் அல்லசானி பெத்தண்ணா குறிப்பிட தகுந்தவராவார்.
17. பாபர் மத்திய ஆசியாவில் ஒரு சிறிய அரசான பர்கானாவைப் பரம்பரைச் சொத்தாகப் பெற்றார்.
18. தன் மகன் குஷ்ருவுக்கு உதவினார் என்பதற்காகச் சீக்கியத் தலைவர் குரு அர்ஜுனைத் தூக்கிலிடும்படி ஜஹாங்கீர் உத்தரவிட்டார்.
19. சிவாஜி புரந்தரை முகலாயர்களிடமிருந்து கைப்பற்றினார்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**V கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க. பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்** 2x1=2

20. i) கூற்று : ஆங்கிலேயர் தங்களது முதல் வணிக மையத்தை சூரத்தில் துவங்கினர்.
காரணம் : ஜஹாங்கீர் ஆங்கிலேயருக்கு வணிக உரிமையை வழங்கினார்.
அ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்
ஆ) காரணம் கூற்றிற்கான தவறான விளக்கம்
இ) கூற்று தவறு காரணம் சரி
ஈ) கூற்று மற்றும் காரணமும் தவறு
ii) பொருந்தாததைக் கண்டுபிடிக்க.
ஷாஜி, சிவாஜி, சாம்பாஜி, ஷாகு, ரகுஜி, போன்ஸ்லே

**VI சுருக்கமாக விடையளி: (7 மட்டும்)** 7x2=14

21. தலைக்கோட்டைப் போரைப் பற்றி எழுதுக.
22. மன்சப்தாரி முறையைப் பற்றிக் குறிப்பு வரைக.
23. சௌத் மற்றும் சர்தேஷ்முகி
24. விஜயநகர அரசின் அரசமைப்பு முறையைப் பற்றி எழுதுக.
25. உலகில் சூரிய ஆற்றலை பயன்படுத்துவதில் முதன்மையான நாடுகள் யாவை?
26. கார்பன் அளவின் அடிப்படையில் நிலக்கரியின் வகைகளைக் கூறுக.
27. இந்தியாவிலுள்ள ஏதேனும் ஐந்து மலைவாழிடங்களின் பெயர்களை எழுதுக.
28. தமிழ்நாட்டிலுள்ள ஏதேனும் ஐந்து கடற்கரையின் பெயர்களை எழுதுக.
29. சட்டமன்ற தொகுதி என்றால் என்ன?
30. முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்களை நியமிப்பவர் யார்?
31. ஊடகம் என்றால் என்ன?
32. சூழல் சுற்றுலா குறித்துச் சிறு குறிப்பு வரைக.

**VII விரிவான விடையளி (ஏதேனும் 4 மட்டும்) வினா எண் 41 கட்டாய வினா** 4x5=20

33. கிருஷ்ணதேவராயரின் பணிகள் மற்றும் சாதனைகளைக் குறிப்பிடுக.
34. முகலாயர்களின் நிலவருவாய் முறையைப் பற்றி விவரி.
35. மராத்தியர்களின் ஆட்சியில் சிவாஜியின் சிறப்பு அம்சங்களை மதிப்பிடுக.
36. புதுப்பிக்க இயலா வளங்கள் – குறித்து விரிவாக எழுதுக.
37. வேறுபடுத்துக:–
1) புதுப்பிக்கக் கூடிய வளங்கள் – புதுப்பிக்க இயலா வளங்கள்
2) சமயச் சுற்றுலா மற்றும் சாகசச் சுற்றுலா
3) காரணம் கூறு: நீர் ஒரு சிறந்த ஆற்றல் மூலமாக கருதப்படுகிறது.
38. தமிழ்நாட்டிலுள்ள நீர்வீழ்ச்சிகளைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.
39. முதலமைச்சர் மற்றும் கேபினெட் அமைச்சர்களின் பணிகள் யாவை?
40. ஊடகத்தை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
41. **இந்திய வரைபடத்தில் குறிக்கவும்:–**
1) தேவகிரி 2) டெல்லி 3) மும்பை (பம்பாய்) 4) சூரத் 5) மதுரை

**VIII இந்திய வரைபடத்தில் குறிக்கவும்:–** 5x1=5

42. 1) ஊட்டி 2) மணாலி 3) டார்ஜிலிங் 4) ஷில்லாங் 5) மூணாறு

***/***

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com